உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானத்திவாகரம்.

இஃது

சிவநேயச்செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திருத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச

சபாப்ரசங்க கோளரியும்,

சென்னை சேத்துப்பேடு,

“ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ மடாலய”

ஸ்தாபகாதீனரும், மடாதிபதியுமாகிய

தேசிக சுவாமிகள்

அருட்கவி

கி. ஊ. பா. கங்காதர நாவல ரவர்களால்

இயற்றப்பட்டு

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியால்

தமது

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.


பரிதாபி ௵ பங்குனி ௴ 7 ௳

ஷை சுவாமி சந்நிதியில் நாவல ரவர்களால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1913-ம் ௵

OFFICE OF THE ... REGISTRAR 9 - APR 1913 MADRAS.
76 / 2.13
1898
Q23:417 M13
146821



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

MADR

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானத்திவாகரம்.

இஃது

சிவநேயச்செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச

சபாப்ரசங்க கோளரியும்,

சென்னை சேத்துப்பேடு,

"ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச மடாலய"

ஸ்தாபகாதீனரும், மடாதிபதியுமாகிய

தேசிக சுவாமிகள்

அருட்கவி

கி. ஊ. பா. கங்காதர நாவலரவர்களால்

இயற்றப்பட்டு

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியால்

தமது

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பரிதாபி ஸூ பங்குனி மீ 7 உ

ஷை சுவாமி சந்நிதியில் நாவலரவர்களால்

அரங்கேற்றுஞ்செய்யப்பட்டது.

1913-ம் ஸூ







உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானத்திவாகரம்.

## விநாயகர் வணக்கம்.

## துதிப்பதிகம்.

O23:417
N13

சோடசச்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் - நட்டராகம்.

### அருண்மணக்கும்பதமே யருளுவாயெனல்.

அருண்மணக்கும் பரம்பொருளே வாக்கியேகாத் தழிக்கு
மமலபிரா னருங்கருணைக் கா திியே சோதியனே
அவனவ்ளோ டலிபலவர் யமர்ந்துநின்ற வுருக்க
ளனைத்தினுக்குந் தலைவனென நிலையுணர்த்தும் வடிவே
பொருண்மணக்கும் புங்கவரு டங்கி நடனமதுப்
புரிபவனே பிரணவவைங் கரனே கணேச்சுரனே •
புரந்சரனிந் திரனயன்மா லண்டரிரு டியர்கட்
போற்றியெனப் புகலடைய நலம்பணித்த பரனே
யிருண்மணக்கும் பவவுததி யெனவலைகொண் டெழுந்து
யேதமிகுப் பாதகஞ்செய் தீதுளக் கயமுக
னிடரடராத் திடமுடனே தொடர்ந்தித்துய ரகற்றி
யெழிலருளிப் பழிதுடைத்து செழிக்கவரங் கொடுத்துத்
தெருண்மணக்குங் கணபதியே திகழுந்தந்தா வளனே
திருவருடா திருமயிலை ஸ்ரீகபாலீஸ் வரரின்
சிவஞானத் திவாகரமே சொலவிழிசாய் நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெய விநாயகனே. (௧)

எல்லையிலாப் பழமறையே யெங்குநிறைந் தவனே
யிபமுகத்தை யுடையவனே யெல்லாங் கடந்தவனே
யெப்பொருட்கு முதலவனே யின்பசுகர் தர்மே
யிகபரத்துக் காதிபனே யிணையில் பரத்துவமே
தொல்லையிலாப் பெரியவர்க ளுளங்கோயி லிலங்குந்
தூயபகாப் பதமேசர்வ சோபித லட்சணனே
துரியந் துரியாதீதச் சுழுச்சியினி லரசே
தோன்றலுடன் மறைதலிலாத் தொன்மையனே ஹரனே
மல்லுசெயு மைவர்களின் வஞ்சச்செய லொஞ்சி
வலியொடுங்க நலங்கொடுத்தாள் வள்ளலே யைங்கரனே
மண்ணவரும் விண்ணவரும் வணங்கித்தொழக் கருணை
வழங்கியவா நின்னையன்றித் தர்க்கம் வேறில்லைகாண்
செல்வமலிச் சீரடியர் சூழ்ந்தும்வலம் புரிந்துச்
சேவைசெயுந் திருமயிலை ஸ்ரீகபாலீஸ் வரரின்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (௪)

## சருவ சொருபலட்சண நினதுடையதென்றல்.

ஆணுடன்பெண் ணலியெனவு மரியயனிந் திரரா
மண்டர்களோ டளவிலெழு பிறவியெனுந் தோற்ற
மாகிவரு மண்டபிண்ட மமைந்தசரா சரங்க
ளாரணமும் பூரணமாய்க் காரணந் தீரமதாய்க்
காணுதற்குங் காட்சியுட னன்குவகை யதுவாய்க்
கருவிகர ணங்கட்பொறி புலன்தொண்ணூற் றாறதுசேர்க்
கடபடமாங் கிஷமுதிர மச்சைசவ்வு நரம்பால்
கட்டிவினை யொட்டிபுசந் தட்டிசன்மங் கிட்டித்
தாணுவென மாட்டிப்பசை யூட்டிவசை நாட்டித்
தடமெனுமூழ்க் கடங்கடலுய்த் தாங்கியே நீங்குதலுஞ்
சருவசுயார் ஜீசப்ரணவ மெனுங்குண்டலி வயமாய்த்
தனியரசு புரிந்தயிடந் தழைக்குஞ் சொருபமெலாஞ்
சேணுலக மாணுலகந் தெரிவரியப் பிழம்பே
தினகரமாய் நிறைவோய் திருமயிலை கபாலீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (௫)

எண்பத்து நான்குலட்ச மென்கணக்கிட் டெழுதா
யெழுத்துமிலக் கணமுமிலட் சணமும் பரத்துவமு
மேகசுக போகயோக மோக்ஷமும் விதேக
மிறப்புபிறப் பொடுவுடன்பட் டெழுமனந்த சனனங்
கண்செவிநா மூக்குமெய்யுங் கலந்துகலந் திருளாங்
காட்டிடையி லாட்டமாடி சேட்டைநவ வோட்டைக்
கைவிடவும் பொய்யுறவு மெய்யறவும் பவாய்க்
கலங்குந்தேரைப் படுங்கதியால் காட்சியிற் பிரமாணங்
கொண்டுமுன் னூழ் விண்டுபணி தொண்டென்று ளண்டுங்
குணம்வருமோ மணந்தருமோ கொடியவனென் னுணர்வேன்
கோடானு கோடிமறைப் புகலரிய வடிவங்
குலவுகின்ற சொரூபமெலா நினையன்றியெங் குளகாண்
டெண்டனிட்டு சேவைசெய்தோர் தேவரெனத் தெரிவார்
தெளிந்தநல்லோர்த் துதிமயிலை ஸ்ரீகபா லீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (௪)

## திருக்கருணைத்தந்த தெய்வீகநீயெனல்.

தேவநகர் மன்னின்சேர்ம கீர்ந்தனுடன் வேதங்
தெரிந்துவொன்றை நான்கெனவே வியாசமதாய் வகுத்தோன்
சிருட்டியதன் றலைவனயன் றானுமால் வல்லாளன்
தீமையடர்ந் தங்கயீன மாய்ப்பிறந்த தக்கன்
மேவரு மேகாட்சரத்தால் துதித்த வீமவரசன்
வியன்மலியு முருக்குயாங் கதனோடிந் திரனும்
விதியுணரா துவந்தகிருச் சமதன் பலியசுரன்
விமலருமை கர்த்தமனு நளனுயிந்து மதியும்
ஆவலுறு சந்திராங்க னறுமுகன் மன்மதனு
மம்மைருக்கு மணிபிரத்தி யுமன னுதிசேட
னதிபுருவ நடுவிடுதி கர்ங்கொட் புருசுண்டி
அங்காரகன் மதிஜனக னகத்தியர் காசிபருந்
சேவிதனே ராவணன் பர்சிராமன் றுதிக்கத்
திருக்கருணைத் தந்தபரமனே ஸ்ரீகபா லீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (௫)

## அவதாரங்கொண்ட அமலநீயெனல்.

சகலநல மலியுஞ்சிந்தா மணிவிநா யகனுய்ச்
சகடைதவிர்த் திடும்விக்கின ராஜன்பால சந்திரர்
சாற்றுங்கஜா னனர்மல்லால ரெனூஉ மயூரேசர்
சங்கரனுர் வதனத்திலைம் முகமீராறு கரமும்
ககனந்தொழ வுதித்தநற் கணேசன் கணபதிமெய்க்
காணமக வான மயூரேசர் தூமகேது
காசியிலைம் பத்தொன்று மூர்த்தமென வெழுந்துக்
கவினிறையும் வக்கிரதுண்ட ராமுடுண்டி யெனும்பேர்ப்
புகழுமறை யவரெனவே யமர்ந்த துண்டிராஜர்
போற்று மகோற்கடராக திருரதமூர்ந் தினியப்
போர்புரிந்து வல்லபை கணேசரதிப் புனிதப்
புகலரியப் பலவுருவா யரியய னிந்திரர்க
டிகழவணங் கிடவமைந்து சித்திபுத்தி மகிழுந்
தெய்வீகனே திருமயிலை ஸ்ரீகபா லீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (அ)

## புகலருநாமப் பூசுரநீயெனல்.

பேராயிர மாயிரமாய்ப் பேசி முடிவதிலாப்
பெம்மானே யெம்மானே பிரணவ வக்கரமே
பிறங்குமஹா மந்த்ர சுமுகாய வோம்கணேசப்
பெருந்தகையே வளவுபடாப் பேரறிவி னடிக்குஞ்
சீராயிர மாயிரமாய்த் தினகரன்போ லேத்தி
சேவிதரா யறுகுவன்னி மந்தாரை புட்பமதாற்
சிந்தையொன்றாய் வந்தனஞ்செய் மைத்தர்முகம் பார்த்துத்
தீதகன்று சாதனைகொள் செழுமைநிறை தவத்தர்ப்
போராயிரம் புரிமயலைக் கடப்பதன்றி யடிமைப்
பொறிபுலனோர் வழிநில்லாப் போக்கினினின் றலையும்
பொய்யன்பாப வெய்யன்மதி நொய்யனென்னைச் செய்வன்
புகலரிய பலநாமம் புனைந்து தேவரடியிற்
றிரமுட னரணம்போ லோரகமாய்த் தொழும்புத்
திகழ்வோர்த்துதி திருமயிலை ஸ்ரீகபாலீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (எ)

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 8-APR 1913 MADRAS.





பல்கோடித் திருநாமம் படைத்த பெருமானே
பன்னிரண்டு கலைமுடிவிற் பார்க்காமற் பார்த்து
பரமதுர்யா தீதசுழுச் சியதிற் குண்டலியுடன்
பகரரிய வருகொண்டுப் பயிலு மானந்தமதாய்
நலமுணர வருபவனே தருபவனே வரங்க
ளுயினுக்குங் கடையனுக்கு நல்குவதுன் பரங்காண்
கட்டாற்றின் கம்பமென நலிந்துவுருக் குலைந்து
நாடுதற்குங் கூடுதற்கு நாட்டமின்றி யலைந்தேன்
கலகலெனச் சிலம்பொலிக்க நடம்புரியு மண்ணலே
கருத்தவிழா தொருநிலையிற் கலந்தவர்க்குட் கனியுங்
கணபதி கணேசநம கருணாகரப் பரமே
கங்குல்பக லற்றவனே காணரிய கருத்தே
திலகமென மனமிடும்பைச் செயிக்குஞ் சத்தோதயமே
சேவைசெயுந் திருமயிலை ஸ்ரீகபா லீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (அ)

## விக்கினந்தீர்க்கு விமலநீயெனல்.

எக்கணங்க ளெனினுமுன தெழிலருட் பூந்தாளை
யிருதயத்தி லிரவுபக லென்றுஞ் சரணிணைந்து
யேத்தினவ ரெத்தகைத்து மின்பநிலை யடைந்தா
ரின்னலுற்று ரெல்லவரு நினைமறந்தா ரெனவே
திக்கனைத்துஞ் சாட்சியமுங் காட்சியனு பவமாய்த்
தெரிந்தவரே தெளிந்தவர்க ளுண்மைவழா தவரே
சோறுமுடற்சுமந்துப் பேணுதற்கே யுழைத்துச்
சிந்தைத்தடு மாறியுழற் செடியடர்ந்த மிடியாம்
விக்கினங்க டனையகற்றிக் கருணைதருங் கடவுண்
மேதலத்தும் பூதலத்து நினைநிகரெங் குளர்காண்
விபரீதப் படுகுழியில் வீழ்ந்துத் தடுமாறு
விஞ்சைமலி தஞ்சமருட் கெஞ்சுமேழை தனக்கே
செக்கர்வேணியன் சந்திர சேகரன்சீர்க் குலவித்
தேசுயருந் திருமயிலை ஸ்ரீகபா லீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (க)

## பிழைபொறுத்தாட் பெருமானீயெனல்.

அனந்தபத வுயிர்களுக்கு வன்னை தந்தை குருவோ
டரசன்சுற்ற மனைவிமக்க ளுறவுபகை நன்மை
யகலாதத் தீமைகன்ம தன்மம்பிறப் பிறப்பை
யளித்தழித்தாட் சருவவலி யமைந்தப் பெருமானே
தினசரியாய் வந்தணைந்து யெனைக்கெடுக்கும் வினையைத்
தீண்டாது மாண்டவரு மாண்டவரு முளரோ ?
தேவர்களுஞ் சீவர்களுந் தெரிவரிய சனனத்
தெப்பமதை யப்பரைப்போ லப்புறஞ் செய்தவரார்
மனதெனூஉஞ் சண்டாளன் வாசனையா லிழிவின்
வாயிலடைந் தளவிறந்த களங்கமுற வலுத்த
மாயையின் சாலதையொடித்து வாயடைந்துமௌன
மன்னும்வழி யதையருளிக் காப்பதுன்றன் றயவே
தினகரனும் நிறைபவாயென் பிழைபொறுத்தாண் டருளுஞ்
சின்மயனே திருமயிலை ஸ்ரீகபா லீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெயவிநா யகனே. (௧0)

## அடிமையின்புன்சொலை யணிந்தருட்புரியென்ல்.

கடிகையெனு நிமையளவு மறவாத் தொழும்புளநற்
கருத்துளமெய் யன்பர்குழாங் களினடியைப் பணியுங்
காதலொரு சிறிதுமிலாப் பேதையெங்ஙனினதுக்
கமலபதந் தனையடையப் படுமோவினைக் கெடுமோ ?
பொடியணிந்துப் போற்றியெனப் பஞ்சாக்கர மோதிப்
புயலென மோதிடுமைந்துப் பயல்கள்வலி யொடுக்கிப்
புனிதவர மதைப்பெறுஞ்சீர்ப் புரந்தரனே தருவாய்ப்
போனகமெய்ஞ் ஞானப்பிர சாதந்தரின் பிழைப்பேன்
கொடியன்பொல்லா மிடியன்சடை முடியன்பாபத் தடியன்
குறையகல யிறைவயேழைக் கூறும் புன்மாலையதைக்
குணங்கொண்டிந் நூலினிது முடியகடைக் கணித்தாட்
குஞ்சர முகத்துடைய தேவே கணபதியே
செடியெனுமூ மூடாடவி யிடமடங்சொண் டிடையாத்
திருதியெனுந் திருமயிலை ஸ்ரீகபா லீசன்
சிவஞானத் திவாகரமே சொலவருடா நமவோம்
ஜெயஜெய விநாயகனே ஜெய விநாயகனே. (௧௧)

# நூல்.

## திருவருண்வேண்டிச் சேவைசெய்தேத்தும் சோடசப்பாமாலை.

பன்னிருசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

பண் - நட்டபாஷை.

ஆனந்த ஞானபர மாதீதலட் சணனே
வயனரி யண்டர்கண் மஹனிய
ராஹாரவோம் சிவசிவவென் றருகிருந் தஞ்சலிசெய்
தைந்தெழுத் ததனை யோதி
தானமொடு தவந்தருமப் பலனளவு பிறவிகொடு
சனன மரணங்க ணீங்கிச்
சைதன்ய மானநிலை தனையடைந் தனரெனநூற்
சாற்றிடுவ துண்மை யலவோ?
மோனமணி மேடையதி லூடுருவி யறிவினால்
முப்பசையாங் கடற் கடந்து
முத்திவழி நத்திநல பத்திபுரி சித்தமது
மூடனியா னடைவ தெந்நாள்?
தேனமருங் கொன்றைமலர்ச் சடையனே மால்விடைமேற்
றினகரனுஞ் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (க)

பங்கயன் பக்கியென வானூடேச் சென்றநாட்
பார்த்தயிட மெங்குமொரு நேர்ப்
பற்றிட மனம்புணுய் வற்றிய சமுத்ரமெனப்
பகரரிய வணங்கலங்கித்
தங்கவழி யின்றியொரு பொய்யினுற் சகலசுகந்
தனையிழக் திடவுந் தன்னைச்
சார்ந்தவத் தாழையுஞ் சாபமிகு மிடியுற்ற
சங்கையது மறை வல்லவே

மங்கைலட் சுமிமணாளன் விட்ணு வடிகாண
மாசள வராக வுருவை
வாய்ந்துங் கண்டிடமுடியா மண்விண்ணெங்கு மோங்கி
மலையாய் வளர்ந்த சிவமே
திங்கள்மான் மழுவரவந் திகழவே மால்விடைமேற்
றினகரனுஞ் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (உ)

சருவவுயிர் களுக்கு மாதாரகர்த் தவ்யனுய்ச்
சாற்றரிய மறைப் பிழம்பாய்
சத்துசித் தானந்த மூன்றினுட் பட்டதாய்
தகத்த காயச் சுடருமாய்
கருணைப்பிர வாகமாய்க் காணரிய வுருவமாய்க்
கண்டவர்கட் கபரோட்ச மாய்க்
கலைகட்பணி ரண்டின்முகட் டினிற்றுரியா தீதமாய்க்
கடந்த சுழுச்சியின் மூர்த்தமாய்
அருளெனுஉ ஞானநிலைச் சொரூபலட் சணனுமா
யாக்கி யளித் தழிப்பவனுமா
யதுவதுவா யிருந்தபடி வுளவறிந் தின்பசுக
மனுபவிப் பதின் முடிவதாய்த்
தெருளுடைய வரமருளி காக்கவே மால்விடைமேற்
றினகரனுஞ் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (ங)

அதிகவித ரணமுடைய வமலகுண ரஹிதமய
வாப்தர்க ளுளத்தில் ஞான்று
மன்பென்னும் பரமவபி தானநிலை யுளவடிவா
யமர்ந்துநடம் புரி வள்ளலாய்த்
துதிமருவு மெய்யடிய ரகமகிழ்ந் திரவுபகல்
சோர்ந்திடா வொரு நெறியினிற்
சொல்லாமற் சொன்னமொழி வெல்லாமல் வென்றுகண்
டேங்காமற் றூங்கி ஞானப்
பதியுற்று மதிபெற்று சதியற்று கதிகற்று
பக்குவந் தனை யடைந்துப்

பரமவானந்த சந்தோஷ சாயுஜ்ய சுகம்
பற்றினவர்க் கெழி லுருவமாய்த்
திதியெனுஉங் காத்தரு டொழிற்புரியு மால்விடைமேற்
றினகரனுய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபாலீசனே. (ச)

ஆதியந் தமுமத்ய மென்பது யிலாதுபல
வவதார புருஷார்த் தமா
யகமது கனிந்தேத்தி வாழ்த்திதொழும் பதுச்செய்த
வன்பர்கட் கன்ப னுகி
நீதிமலி சதுர்மறையா றங்கஷாட் குணவிசித
நித்தியாப ரோட்ச குருவாய்
நிலவெனவே வொளிதிகழ வுருவுட னெழுந்தருளி
நினைந்தவர மருட் புரிந்து
சாதிமல்லிகை முல்லை யிருவாட்சி சண்பகஞ்
சந்தனங்குங் குமமு மஷ்டச்
சாதனம .தெனமலர்க ளவைமணங் கலவாதுத்
தண்டமிழ் மாலைகட் சூடியே
சீதளநற் புதமதனைக் கொண்டாட மால்விடைமேற்
றினகரனுய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (ரு)

ஆதவன் முன்பனிநின் றிடமுடியா தனுபவ
மலைவரிகருன் றிருவருண் முன
மளவரியுப் பவவினைக ளவலப்பட மன்றிதலை
யாட்டிதளை மாட்டி வாட்டிச்
சோதனைகட் சிறிதுஞ்செய யெவ்வகையுந் திறமிலைச்
சொரூபலட் சண முணர்ந்துச்
சும்மா யிருக்கவருஞ் சுகமொழியைப் போதிக்கிற்
றேற்றமுடன் மாற்ற முளதோ ?
வேதமுதற் புராணமொடு கலைகள் விரதமுந்தானம்
விஞ்சைமலி தவமும் யோகம்
விபரீத சங்கையொழித் திடுமுபரதி வைராக்கிய
மேற்கொண்டிரு வினைக ளற்றுச்



சென்னை-600 008.

சேதனு சேதனங்க ளறவருளு மால்விடைமேற்
　　றினகரனுய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
　　சிற்பர கபா லீசனே. (சு)

அங்கென லு மிங்கென லு மம்மையிம்மை யென லு
　　மட்சரப் பகுதி யென லு
மன்னேயப் பனுமென லு மவனவ ளதுயிதய
　　னரிருத்ர மஹேஸ்வ னுடன்
றங்கிடுஞ் சதாசிவ மொளியிரு ணரகமோட்ச
　　சதுர்வித வுபாய மோனஞ்
சார்கிலா வினைகளுடன் விதிமதியும் பதியென லுஞ்
　　சனன மரணங்க ளென லு
மெங்குசென் ருலுமொரு மயமாகவே தன்னு
　　விலகுஞ்சிவ மான தென லு
மேகாந்த நிலையதனுன் மேகாந்தப் படியற்ற
　　யிணையிலா வறிவி னிலையாற்
றிங்களென நிறையடியர் சேவிக்க மால்விடைமேற்
　　றினகரனுய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
　　சிற்பர கபா லீசனே. (எ)

எண்ணிலாச் சனனமதில் மானிடஞ் சிறந்ததென
　　யெழுதினு ரனுபவ மதா
யின்பம்வீ டதையடைந் தவர்களெனு மஹனியர்க
　　ளேழைமதி யுளனென் னறிவேன்
கண்ணிலான் பார்வையுஞ் செவியிலான் கேழ்வியுங்
　　காலிலான் நடையு மதைப்போல்
கனிவிலான் பக்தியுங் கருத்திலான் புத்தியுங்
　　கலையிலான் விதரணையு நற்
புண்ணியமில் லான்றனமும் பொறையிலான் ஞானமும்
　　பொய்யகலான் ருன தவமும்
பூரணமிலா வயதும் புன்மையழியா நெறியும்
　　புகலிற்பய னிலையென்பர் காண்
திண்ணியமெ யன்பர்க்குத் திருதியென மால்விடைமேற்
　　றினகரனுய் சாரி வருகுந்

தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (அ)

ஸ்ரீமா ருஞ் சம்பூர்ண பக்தி காண்டத்தின் படி
வுள்ளமதை ஞான நிலையி
லுள்ளததை வுள்ளபடி யோர்ந்துவினைத் தீர்ந்தொழிக்
தொடுங்கியே நிற்ப தெந்நாள் ?
களிறெனவே மும்மதங் கொண்டகங் கரிக்குழைக்
காட்டிடைத் தவித்து மாயக்
கற்பனையில் விற்பனனு யற்பசெய லுற்பவமாய்க்
கருவி கரணங்கட் குரு
வளிநேரலை யாதொருபா னிற்குநெறி கற்காது
வன்மனக் குரங்கின் வழியே
மாய்ந்துவுபி ரோய்ந்துகடஞ் சாய்ந்தனலிற் றீய்ந்திடின்
வாழ்விப்ப தெவ ரையனே?
தெளிவுகொண் டடியர்தொழத் திகழுடன் மால்விடைமேற்
றினகரனுஞ் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (௯)

கருதரிய பரவெளியி னடனமது புரியுமுக்
கண்ணனே செக்கர் வேணி
காரணமுங் காரியங் கடந்தநற் பெரியவர்கட்
காட்சியினிற் சாட்சிய மெனவே
பெருகிவருஞ் சிவஞானப் பாலதை யருந்தினவர்ப்
பெற்றசுக மற்ற யெளியேன்
பேசரிய வினையுததி தனைக்கடந் திடுவனோ ?
பேதையேன் கதி யென்னவோ ?
அருளிலையே னினதுபயச் சரணடைவ தெவ்வண
மையகோ ? துணை யெவருளா
ரானந்த மோனநிலை ஞானத்தி னூடுசென்
றறியும்பதி யறிய வருள்வாய்
திருவுள மென்னோசொலாய் தியாகனே மால்விடைமேற்
றினகரனுஞ் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (௧௦)

மாதவஞ் செய்தவர்க ளெவர்களோ வவர்களே
வரம்பெற்றுன் மல ரடியினில்
மங்காமலும் பிறவித் தங்காமலும் வினையின்
வஞ்சமதாற் றுஞ்சா மலே
சாதனையில் மன்னுநல யாதவ னெனவிளங்கி
சந்ததமும் வாழ்ந் திருப்பர்
சகடையெனும் பகடதனின் வாய்க்கரும் பதுவாகத்
தவிக்கின்ற யேழையின் மேன்
போதமிகு மப்பனே முப்புர மெரித்தவா
புகலருநின் கருணை யிலையேற்
புன்மையே னென்செய்வே னென்றுமிலை தருவதைப்
புந்திநைந் தேற் றலைகுவேன்
தீதற்ற மெய்யன்பர் சேவிக்க மால்விடைமேற்
றினகரனாய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (௧௧)

இல்லாத வீண்பழிக ளென்னையறி யாப்படிவர்
திரவுபகற் கண் மூடிடா
தேய்ப்பதற் கென்னவினைச் செய்தேனென் றொருசிறித்
மெவ்விதத் துந் தெரிகிலேன்
எல்லாரு நல்லவர்தா னிவர்நவில் விழிவுபட
யென்னையமைத் ததுயென் சொலாய்
என்றாலு நின்றயவே கொன்றாலுந் துக்கமிலை
யிட்டு யேசிடு மீனற்போற்
பொல்லாதக் குணம்படைத் தல்லல்பட வைத்ததுப்
போதும் போது மினியொருப்
போதுந் தாங்கிடவல்லேன் புந்திநைந் தனனொரு
புறநீக்கி விழி நோக்கியே
செல்வமிகு தினதருடா மாபுண்ணியம் மால்விடைமேற்
றினகரனாய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (௧௨)

விரதமதென் பதுமனது பவவுளையி னுழையாது
விபரீத மதைக் கொளாது

விஞ்சைமலிச் செஞ்சரணந் தஞ்சமென செஞ்சினிலே
விட்டிடா மற் பிடித்து
வரமது மிகுந்துன்பத நிழலதை யண்டிவரு
மகிமை யருட் பாலருந்தி
வாடாதுப் பிணையொன்றை நாடாதுத் தேடாது
மௌனநிதி போக யோகத்
திரமதை யடைந்துவினை யதனுக்கிடைந்துமதிச்
செழுங்கருணைப் பெற்று நல்லோர்த்
தேட்டமிகு நாட்டமதா லோட்டையொன்பதை யடைத்து
செப்பரிய நிலைப் படைத்து
சிரவணஞ் செய்யுமெய் யன்பர்தொழ மால்விடைமேற்
றினகரனுய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (௧௩)

காமம்வீ டொன்ருக வோடும்பொன் னதுவெனக்
கருதிமனச் செய லொடுக்கிக்
காண்பானைக் கண்டுவுளம் வேண்டாத தைநீக்கிக்
காலனெனு மரண மதனுக்
கிடுபட் டயராது யெங்குமொரு படித்திற
மெய்தினவர்க் கின்ப துன்ப
மெதுவரினு மெதுபோய வெண்ணமதுச் சிதையார்க
ளேதோவோர் சேர்க்கை மணத்தால்
கேடுவடைந் திடவரினுஞ் சிறிதுமுள நையாது
கிருபைமலி குரு முகத்திற்
கேட்டவொரு வுண்மைசொ ணுட்டமதா லதைவென்று
கிளறு மொளி போனிறைகுவர்
தேடுவர்க டேட்டமே சேவைசெய் மால்விடைமேற்
றினகரனுய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (௧௪)

மஞ்ஞையெனும் வடிவமாய்ப் புன்னைமரத் தடியினில்
மஹாலிங்கந் தனை யமைத்து
வாஞ்சையுடன் கற்பக வல்லியா மெனதன்னை
வந்திக்க நின்ற சிவமே

பஞ்சையினும் பஞ்சையான் பஞ்சவர்கண் வஞ்சமாம்
படுபள்ளந் தனி லிழிந்துப்
படும்பாடு தெரிந்துங்கண் பாரா திருப்பதென்
பாபமோ கோப சாபமோ?
அஞ்சலெனத் தஞ்சமது கெஞ்சுமெனக் கஞ்சேலென
யன்னைபோ லெடுத் தணைத்து
ஆதரைமே லாதரவு பாதகனுக் கருள்பவரா
ரையகோ? அறிகிலே னியான்
செஞ்சரண விந்தமதின் விஞ்சைசதா மால்விடைமேற்
றினகரனுய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (௧௫)

மூவர்த் தேவாரமுறைக் கேட்டுகுரு மூர்த்தியாய்
முன்வந் தெழுதியே கைகாட்டு
முத்திரிக்கை யிட்ட தமிழ்வேதமுஞ் சேர்ந்த
மோன ஞானச் சாதகப்
பாவெனூஉம் பன்னிருத் திருமுறையாஞ் சிவஞானப்
பான்மாந்தி யருட் பெற்றிலேன்
பாவமே பாயாசம் பழிப்பேபா லன்னங்கறி
பகையச்சமுப் பழங்தேன் பணி
சிவனொரு வழியில்லா தலைவதே படுக்கைசுகந்
திப்பிரமை யஷ்டாங்க யோகந்
தெருசுற்றிக் கையேந்தி வாங்கிநாட் கழிப்பதுந்
தில்லு முல்லது யேகாந்தந்
தேவர்கட் கதிபனீ யறிந்ததுவே மால்விடைமேற்
றினகரனுய் சாரி வருகுந்
தேசுயர் மஹேசனே திருமயிலை வாசனே
சிற்பர கபா லீசனே. (௧௬)

——o——

## தஞ்சம்வேண்டும் பஞ்சரத்தினம்.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம். பண் - நட்டபாஷை.

தரணிபுகழ் நரசன்மந் தனையெடுத் திடினும்வருஞ்
சங்கைகொடு வங்க யீனந்
தானின்றி பொறைவாய்மை சத்தியந் தானந்தருமந்
தவமுஞ்சற் சங்க நேசந்

தனையறிந் தொருநிலையிற் பிரிவிலா சாதுக்க
டங்களின் சேவை யன்பு
சகள மேனியுஞ்சைவ வாசாரங் குருபக்தி
சன்மார்க்க சிந்தைத் தூய்மை
வரமருளுந் திருநீறு முக்காலந்தீண்டிடும்
வண்மையு முருத்தி ராக்க
மணியணித வாலய வந்தனை சிவஞான
யன்னுநற் சகச நிட்டை
மாறாத நெறியோங்க மாயக்கள் வர்கணீங்க
வலிசெய்மனக் குரங் கொடுங்க
மஹானியர்க ளுரைகளதுச் சிறிதும் பழுதாகாது
வாசித்ததற் கிடர் வராது
மரணமெனுங் கடலதைத் கடந்திடக் குண்டலியின்
வாசியத னுள வறிந்து
மறுபிறவி வாராமன் வந்தாலும் பிறவாமல்
மாய்கைவழி யுட் படாமல்
மாசற்ற ஞானமதை மோனமெனும் பெட்டியுள்
வைத்து வானந்த மெய்தி
வாயதைத் திறவாது தனியிருந் தாசுசெய
வரமருள்வ துனது பரமே
புரந்தர மஹேசனே, நிரந்தர வுலாசனே
பூசனையோ டபி ஷேகமும்
போதமலி யைந்தெழுத் தோதிபொறி புலனொன்றாய்ப்
பொருந்திதவ மதுத் திகழவே
புன்னைமரந் தன்னடியி லன்னை கற்பகவல்லி
போற்றசிவ லிங்க வுருகொட்
புனித கபாலீசனே கெஞ்சிடும் பஞ்சைக்குன்
பூம்பதந் தஞ்ச மருளே. (௧)

அன்னைநீ தந்தைநீ குருதெய்வ மரசனீ
யவனியுடன் மனை மக்கணீ
ஆதிநீ சோதிநீ யண்டபிண் டமுநீசுற்
றமுமித்திரர் பகைவர்களு நீ
அயனரி ருத்திரன்மஹேஸ் வரன்சதா சிவமுநீ
யைம்பத்தோ ரக்கரமு நீ

ஆசைசுகி துகியுநீ யறிவரியப் பரமுநீ
    அப்பால் மூப் பாழதுவுநீ
நன்மைநீ தின்மைநீ நவிலொணுச் சுழிமுனைநீ
    நவிலருங் குண்டலி ரூபிநீ
நாளுநீ கோளுநீ நவில்பஞ்ச பட்சிநீ
    நவக்கிரக நலம் பொலனுநீ
நாட்டநீ தேட்டநீ கூட்டமுநீ கோட்டமுநீ
    ஞானுதி காரணனு நீ
நாத நாதாந்தநீ வேத போதாந்தநீ
    நமசிவய வெனும் பொருளுநீ
சின்மயா னந்தநீ சிவஞானச் செல்வநீ
    தேடரிய சொச்சொரூப நீ
சித்தியும் புத்திநீ சத்தியஞ் சாந்தநீ
    சித்தர் நத்திமெத்த நீ
தீங்கனியுஞ் சுவையுநீ தேவர்கட் கிறைவநீ
    திரிமூர்த்த மான பொருணீ
திருவரு டாவருகுங் குருபரம வடிவநீ
    செயலுஞ்செய லற்ற நெறிநீ
பொன்னுநீ மண்ணுநீ எண்ணுநீ யெழுத்துநீ
    புகனுமிலக் கணமதுவு நீ
பூசைநீ வாசநீ புண்ணியதவ விரதநீ
    போக்குவர வற்ற வுருநீ
புன்னைமரந் தன்னடியி லன்னை கற்பகவல்லி
    போற்ற சிவலிங்க வுருகொட்
புனித கபாலீசனே கெஞ்சிதொழும் பஞ்சைக்குன்
    பூம்பதந் தஞ்ச மருளே. (உ)

தொல்லையெனுங் காட்டினி லெல்லையில்லாத் துயரஞ்
    சூழ்ந்து நானெனு மாணவச்
சூரனதி வீரன்பழி காரன்வழி தனிற்சிக்கி
    சூதும் வாதும் பாதகர்
துணியுடன் செய்துவூன் பணிமணியிற் சிந்தையைச்
    சுகமென வழித்துக் கெட்டேன்
சுந்தர மஹேசனே சுயம்பிர காசனே
    சுழிமுனையி னட ராசனே

கல்லான பசுபாற் கரந்ததுவுங் கரியது
கரும்பதனைத் தான் றின்றதுங்
கனமேரு வில்லாய் வளைந்ததும் பாற்கடற்
கடைந்தவிட மமு தான துங்
கஞ்சன்சிரங் கொய்ததுங் கண்ணன்விழி யதைவைத்துக்
கனலிங்கப் பூசை செய்யக்
கருதுவரந் தந்ததுங் காலனை யுதைத்ததுங்
கான்மாறி யாடின ததுங்
வல்லகாமன் றக்கன் றனையழித் ததும்மதியை
மௌலியா யணிந்த ததுவு
மாமனென வந்து வழக்கானதைத் தீர்த்தது
மகிமையுடன் குருளைகளின் முன்
மாதாவெனத் தோன்றிப் பாலூட்டிக் காப்பாற்றி
மந்திரியா யமைத்ததுவுஞ் சீர்
மாணிக்கம் விற்றதும் வளையலிட் டதுஞ்சித்தர்
வளமையதைக் காட்டிய ததும்
பொல்லாதவன் பழியைப் போக்கியாட் கொண்டதும்
புகழ்தருமிக் காக வந்துப்
புகலரு மிலக்கணங் கீரருக் கருளியதும்
புன்மையே னென் னறிகுவேன்
புன்னைமரந் தன்னடியி லன்னைகற் பகவல்லி
போற்றசிவ லிங்க வுருகொட்
புனிதகபா லீசனே கெஞ்சிதொழும் பஞ்சைக்குன்
பூம்பதந் தஞ்ச மருளே. (ரு)

ஆரண மெனுந்தமிழ் வேதமதை யெழுதினது
மன்றுலின் கீழிருந்து
அகமகிழ நால்வர்க்கு வறமுரைத் ததுநரிக
ளதனைப் பரி யாக்கினதுவு
மலையது புரண்டோட வைகையை யனுப்பினது
வவனுதிர்ந் தப் பிட்டதை
யாசையுட னுண்டுமண் சுமந்தது மரசனடிக்
ககப்பட்டா மன்மறைந் ததுங்
காரணந் தெரிந்தேந்தல் கண்ணீர்விட் டழுததுங்
கரிக்குருவி மூத்தி மோட்சக்

கயிலைசுக முற்றதும் வாகுண பாண்டியருக்கு
    கனகமுடி தனைத் தந்ததுங்
கையில்மான் மழுவேந்தி கணபணு வணியெனக்
    கருதினது வும்பிர்ம னின்
கபாலமதைக் கரங்கொண்டு பலியேற்று வருவதுங்
    காளத்திக் கரு டங்கதுங்
தாரணி யெலாம் பணியுந் திருமேனி யருளினதுஞ்
    சங்கப் பலகை யீந்ததும்
சங்கரிபார் வதியுமா தேவியாந் தடாதகைத்
    தன்னைமண மதுச் செய்ததுஞ்
சருவ சீவர்களுக்குஞ் சரணநிழ லருட்புரி
    சதாசிவமு மாய் நிற்பதுந்
தந்திமுகன் றனைச்சித்ர வுருவில்வரப் பார்த்சதுஞ்
    சண்முகம் வெளிப் பட்டதும்
பூரணு னந்தநிலை நின்றமஹான்க ளலாமற்
    பொய்க்களவு வஞ்சங் குரோதப்
போக்கிலே நாளதைக் கழித்தலைந் தறிவிலாப்
    புலையனுணர்ந் துரைக்க வசமோ ?
புன்னைமரந் தன்னடியி லன்னை கற்பகவல்லி
    போற்றசிவ லிங்க வுருகொட்
புனித கபாலீசனே கெஞ்சிடும் பஞ்சைக்குன்
    பூம்பதந் தஞ்ச மருளே. (௮)

சண்முகனை சரஹணனை குமரகுரு பரனைதிரு
    சம்பந்த னென வனுப்பி
சமணபடு குழியடைத் தனலிற்புன லினிலேட்டைத்
    தானிட்டு சைவ சமயந்
தழைக்கவுந் திருநீற்றினு லரசன் வெப்புநோய்த்
    தலைக்காட்டி டாதொழிய வுஞ்
சாற்றும் வணிகன்றனை யெழுப்பிமணஞ் செய்ததுஞ்
    சந்தரமும் வந்தித்த நற்
பெண்மணியாம் பூம்பாவைத் தனக்குயி ரளித்ததும்
    பீடிய ராலால சுந்திரர்
பித்தாவென் றேசமறை யவனென வுதித்தவர்ப்
    பிரியமுற பரவைய ரிடம்

பெட்புடனள் ளிரவினிற் றூதுசென்ற துவுமுதலைப்
பிள்ளைதா வருட் பெய்ததும்
பேசரிய வாமூரர் சூலையதைத் தீர்த்ததும்
பீதிகொ ணஞ்சதைக் குடித்து
யெண்ணரிய வலியுடைய மதகரி வணங்கினது
மியம்புங் கருங் கற்றெப்பமா
யெழிலுடன் சனன வுததியினைக் கடந்தது
மெங்கணும் வணங்கி யேத்தி
யின்னலற வப்பூதிச் செல்வன் பிழைத்ததுவு
மிறைவனீ குரு மூர்த்தியா
யெழுந்து வேதந்தன்னை யெழுதினதுங் கால்விலங்
கிட்டதைநீக்கி யாட் கொளப்
புண்ணியமெனவே வைகைப் பெருகினது மூகையும்
பூபதிகண் கண்டு மகிழப்
புத்தர்க ளுணவாய்த் திறந்துபேசி னதுமவர்
புகழ்ந்தடைந் தவை யுணர்வனோ ?
புன்னைமரந் தன்னடியி லன்னை கற்பகவல்லி
போற்ற சிவலிங்க வுருகொட்
புனித கபாலீசனே கெஞ்சிதொழும் பஞ்சைக்குன்
பூம்பதந் தஞ்ச மருளே. (ரு)

---

## பிச்சாடனப் பெருந்தகைப்பத்து.

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம். பண் — வியாளக்குறிஞ்சி

---

மாசில்லா மணியே மான்மழு வரவமு மதிசூடி
மங்கையுங் கங்கைத் தங்கித் திருநடம் புரிவோனே
வாசி யெனுகிட்டை தனிலே விளங்கிடும் வள்ளலேநல்
வரமே தருவ துனதுப் பரங்காண் வணங்கினனே
ஊசி முனைமேற் றவஞ்செய்கினு மன மொடுங்காதே
லொன்றும் பயனிலை யெனினுங் குருமொழி யுதவிடுங்காண்
பேசுதற் கரியவா பிர்மக் கபாலந் தனையேந்தி
பிச்சாண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே. (க)

அத்தா மனமொரு மித்தாற் சுகவழி யடைவதலா
லந்தோ பவவழிச் சிந்தை யலைவதா லணுவுமிலை

எத்தால் மயலின்கர் வத்தா லழிவதூ ழென்றோதா
　னென்றோ யறிந்தாள் பவரா ரரசே யிருவினையாம்
மத்தா லடிபட் டயர்மோ ரெனவுள மாழ்குவனென்
　மதியோ விதியோ சதியோ கதியென் வசனித்தாள்
பித்துட னன்பர்முன் பிர்மக் கபாலந் தனையேந்தி
　பிச்சாண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே. (௨)

அரியிந் திரரண் டர்களோ டமர ரருகிருந்து
　ஹரஹர வோம்நம சிவய மஹாதேவ வபயமெனப்
பரிவுடன் மனம்வாக் குங்காய மொன்றாய்ப் பணிந்து தொழப்
　பரமா னந்தமெய்ச் சுகந்தந் தருளியப் பண்ணவனே
கரியுரி போர்த்துக் காலனை யுதைத்தமுக் கண்ணுதலே
　கசடன் றனக்குத் துணையெங் ஙனமுண்டுக் காண்கிலனே
பெரியோ னெனத்தொழ பிர்மக் கபாலந் தனையேந்தி
　பிச்ராண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே (௩)

வஞ்சி யுமாதேவி கற்பக வல்லியும் வரம் பெருக
　மஞ்ஞை யுருகொண் டேத்திடப் புன்னை மரத்தடியில்
மஞ்சுருவாக சிவலிங்க வுருவுடன் மன்னுபவா
　வஞ்ச மனக்குரங் கதுவயப் படுநிலை வழங்குவையோ ?
அஞ்சலென் றாதரிப் பவருனை நிகரெங்கு மறிகிலனே
　ஆலத்தை யமுதாய்ப் பொசித்தவர் தயைசெய் தாண்டருளே
பிஞ்ஞகனே வயன் பிர்மக் கபாலந் தனையேந்தி
　பிச்சாண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே. (௪)

பாரதி லடிமைப்போற் பாவியெங் ஙனுமிலைப் பரிதாபம்
　பார்த்திருந் தால்வினைத் தீர்ப்பவரா ரோர்சொற் பகர்வாயே ?
சீரணி நாவலூர் சுந்தரர்க் கனிவாகச் செப்பியநற்
　றிருத்தொண் டர்க ளன்பு டன்வளர் மயிலைத் திருவுருவே
காரடர் வெய்யப் பிறவிநோய்க் கடக்கக் கண்பாராய்க்
　காலிற் சிலம்போ தையெழ நடஞ்செய்க் கருணீகனே
பேரின்ப நலந்தா ? பிர்மக் கபாலந் தனையேந்தி
　பிச்சாண்டி யெனத் தெருவுலம் வருசிவப் பெருமானே. (௫)

மன்னு மெய்ஞ்ஞான மாணிக்கமலையே மணியொளியே
　மாசற்ற மனத் துளரு ணடஞ்செய் வள்ளலே மா
கொன்றைச் சடையனே குலவும் பொருளே குருவடிவே
　கொலையன் புலையன் வலைய னெனைக்குணங் கொள்ளுவையோ ?

என்றுன் கழனின்று வருந்திடுவே னேழையனியா
னெனினுங் குறைதீர்த் தருட்செயு மரனே யிச்சமயம்
பின்மு னறியாப் பிர்மன் கபாலந் தனையேந்தி
பிச்சாண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே. (௬)

அனாதி ரட்சகா வட்ட லட்சணனே வகிலேசா
அறியே னெறியொரு சிறிதேனுமிலா தலைவுறறேன்
தனாதிச் சையினாற் சருவமுங் கணித்தருட் சங்கரனே
சம்போ சதாசிவ யெனசந்ததந் துதிச் சாற்றுகிலேன்
பனாதி யெங்கனு மெனைப்போற் கண்டதிலைப் பரம்பொருளே
பரமார்த்த மென்னென் றுணர்கேன் றுயர்த்தீர்ப் பதம்போற்றி
பினாக ப்பாணியே பிர்மக் கபாலந் தனை யேந்தி
பிச்சாண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே. (௭)

அரஹர சிவநம சிவயவோ மெனநினைந் தர்ச்சித்து
வருடருந் திருவெண்ணீ றணிந்துசின் முத்திரை யதுதந்து
கரதலா கமலம்போ லுன துரு தனையுள்ளந் தனிற் கண்டு
கண்டவை விண்டவைப் பண்டையூழ்க் கொண்டதை கடந்தில்
விரதநா ளதிலொரு நிமையேனு மனதொன்றும் விபரீதம் [லேன்
விலகிலே னிலகையா யலைந்துவு ணவையுண்ட வெறியேனே
பிரணவ் முரைத்திலாப் பிர்மன் கபாலந் தனையேந்தி
பிச்சாண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே. (அ)

மாசூற்ற மனத்தவ் ருளாகி னடித்திடும் வள்ளலே நன்
மணியே மரகதப் பச்சை வைடூரிய மாணிக்கமே
பார்சங்கொண் டிடவரு முப்பசை யென்பதின் பற்றற்று
பகைபழி யச்சஞ் சுகிதுகி பிறப்பிறப் பவைநீங்கி
மோசந்தந் திடுவினை யெனுமூழ்க் கடலில்மூற்று மூழ்காமன்
முளரிப் பதநிழ லண்டிப் பிழைக்கத்திரு முறையருள்வாய்
பேசர்க் கரியவனே பிர்மக் கபாலந் தனையேந்தி
பிச்சாண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே. (௯)

அருந்தவஞ் செய்தவ ரறந்தனை விழைந்தவ ரவனியெலா
மடிபணிந் திடுந்திருத் தொண்டர்க ளனவுன்று ளனுகினர்கா
ணிருவினை யதிலொரு புனையேனுந் தொலைத்திலா திடருற்ற
யேழையேன் கோழையா னென்செய்வே னோர்நா ளிறப்பதுவே
பொருந்தியிச் சனனத்தி லுனையெனு ளறிந்திடும் பொருட்கண்டுப்
பொன்றுப் படிநிலை நின்று லன்றிஞானப் புகழுளதோ ?

புழுத்தவுடற் சுமையகன்றுன் பொன்னடியைத் துதித்துப்
 புனிதமுற தனியாக்கிற் புண்ணியந் திவாகரனே
இழுத்திகழு மேழைபர தேசிக் கிங்கா ளிதங்கி
 யெழிலருளென் முறைகேட் டிறைவா கபாலீச்சுரனே. (௮)

—o—

## சரணச்சதுர்முகம்.

### பண் – குறிஞ்சி.

அருளே சரண மண்ணலே சரண மகண்டித மெய்ப்
பொருளே சரணம் புனிதனே சரணம் பொய்யகலார்க்
கிருளே சரண மிறைவனே சரண மெழின் ஞானத்
தெருளே சரணம் மயிலைக் கபாலீசனே சரண் சரணே. (௧)
 மூவா சரண முதல்வனே சரண முறைகேட்டுக்
 காவா சரணங் கண்ணே சரணங் கருதினர் முன்
 வாவா சரணம் வள்ளலே சரணம் வரமருளுந்
 தேவா சரணம் மயிலைக் கபாலீசனே சரண் சரணே. (௨)
அத்தா சரண மப்பனே சரண மடியர் தொழுங்
கர்த்தா சரணங் கருணீகா சரணங் கருதரிய
மூத்தா சரண மூர்த்தி சரண மோன ஞானச்
சித்தா சரணம் மயிலைக் கபாலீசனே சரண் சரணே. (௩)
 சாத்திரா சரணஞ் சங்கரா சரணஞ் சரணடியார்த்
 தோத்திரா சரணஞ் சயம்புவே சரண்ந் தூயமன
 நேத்திரா சரண நிமலா சரண நில்யு ண்மைலே
 க்ஷேத்திரா சரணம் ஸ்ரீகபா லீசனே சரண் சரணே. (௪)

## வாழி விருத்தம்.

ஐங்கர விநாயகனே டண்ணல் கபாலீச
 னம்மைகற் பகவல்லி குகன்வள்ளி தெய்வானை
தங்குமஞ்ஞை வேல்கணங்க டழைவெண்ணீறுத் ராக்கஞ்
 சம்பந்த நாதனுஞ் சுந்தரர் நாவுக்கரசர்
துங்கமணி வாசகருந் திருத்தொண்டத் தொகையர்
 சொல்லரிய சிவசமய மறைசுருதி யடியார்
எங்கும் புகழ் திருப்பணிசெயன்பரு மெய்பக்த
 ரிந்நூலுக் குதவினரும் வாழிய வாழியவே.

—o—

சிவஞானத் திவாகரம்
ஸமாப்தம்.

146821

செல்லாத வார்த்தைகளைத் திறமு மறபென்பேன்
சென்மகன்ம தன்மதானஞ் சிறப்பு மறப்பென்பேன்
வல்லாள னிலையென் றகங் கரித்து வசை யுரைப்பேன்
மரணமென விலைநானே சர்வம் பிர்ம மென்பேன்
இல்லாத யேழைபர தேசிக் கிந்நா ளிதங்கி
யெழிலருளென்முறைகேட் டிறைவா கபாலீச்சுரனே. (ச)

பாவமெனும் படுகளத்திற் படுத்துறங்கி வுறங்கிப்
படுங்கதியை நினைத் தழுக நினைத்தன வங்கமெலாந்
தேவர்களும் பிறந்துபிறந் திறந்தனரென் றுரைக்கத்
திடுக்கிட்டே நடுக்கலுற்றேன் றெரிந்தனை யென்னுளமே
ஆவலுட னுனதுபயத் திருவடியைத் தொழுது
னருள்மிர்த மதைப்பொசித்து னடியனெனஞான்று
மேவலில்லா யேழைபர தேசிக்கிந்நா ளிதங்கி
யெழிலருளென் முறைக்கேட் டிறைவா கபாலீச்சுரனே. (ரு)

திங்களணி சங்கரனே சிற்சுகலட் சணனே
திரிபுரத்தைக் காய்ந்தவனே செங்கண் மால்விடையேறித்
துங்கவரந் தந்தருள வரும்பரமா னந்தா
சுயம்புவே சம்போ சிவமே சூக்ம சைதன்னியனே
தங்குமொரு வழியதனைச் சார்ந்துத் தனியிருந்து
சக்சநிட்டை யடைகுவனோ ? சாண்வயிற்றை வளர்க்க
யெங்குமலை யேழைபர தேசிக்கிந்நா ளிதங்கி
யெழிலருளென் முறைகேட் டிறைவா கபாலீச்சுரனே (சா)

மாசற்ற மனத்தினருண் மணக்குஞான மலரே
மறைப் பிழம்பே கருணைமலி வள்ளலே சங்கரனே
பாசம்விடா மாய்கைவழிப் படித்தலைந்தே னரனே
பரமார்த்த மென்னறிவேன் பாவாதீதப் பொருளே
வாசனையா மின்பத் துன்பம் வந்தணுகிக் கெடுக்க
மதிகெட்டுன் பதிவிட்டு மாழ்கினேன் கண்டவர்க
ளேசநின்ற யேழைப்பர தேசிக்கிந்நா ளிதங்கி
யெழிலருளென் முறைகேட் டிறைவா கபாலீச்சுரனே. (எ)

பழுத்தவுளத் தினரடியார்ப் பற்றும் பரத்துவனே
பாழுக்குழைத் தலுத்திடவே படைத்ததென்ன பயனே
அழுத்தமுள்ள வினைச்செயலா லந்தோ வந்தோ வழியு
மற்பனைநீ கைவிடினே யாதரிப்பா ரிலைகாண்

பெருந்தகை யோனே பிரமக் கபாலந் தனையேந்தி
பிச்சாண்டி யெனத் தெருவலம் வருசிவப் பெருமானே. (கo)

---

## ஏழைப்பரதேசிக் கிதய்கெனுமட்டகம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம். பண்நட்டபாஷை.

---

மன்னுநிறை மஹாமுனியர்கண் வாழ்த்துந்தேவ தேவே
மஹத்துவங்கள் மலிந்தவனே மாசில் மனோரதமே
கன்னலென கவுணியர்பா லுண்டவண்ணல் களிக்குங்
கங்கையனே சங்கரனே கருணீகனே ஹரனே
சின்மயனே சிற்பரனே திங்கடங்குஞ் சடையாய்
திரிபுரத்தை யெரித்தவனே செக்கர் வேணியனே
இன்னல்மிகு மேழைபர தேசிக்கிந்நா ளிதங்கி
யெழிலருளென் முறைகேட் டிறைவா கபாலிச்சுரனே. (க)

வள்ளலென யேத்திசதா வணங்குமெ யன்பருக்கு
வாழ்வுதந்துக் காத்தவனே மாதவர்கட் கரசே
உள்ளமறிந் தருளளிக்கு முத்தம சாட்சியமே
வுடல்தனு வுயிரளவா யுகந்தரசாள் பவனே
கள்ளமனத் துடையவனென் றெண்ணியே கைவிடினே
கலங்கிடுவேன் கடையவனென் கதியின்னதென் றறியேன்
எள்ளாது யேழைபர தேசிக்கிந்நா ளிதங்கி
யெழிலருளென் முறைகேட் டிறைவா கபாலீச்சுரனே. (உ)

ஆதவன்முன் படும்பொருட்க ளனைத்து மாய்ந்து விடுமற்
றல்லாது பிழைப்பதில்லை யனுபவங்கா ணதைப்போல்
வாதனைசெய் வதினுமுயிர் மாய்த்திடுத லலமே
வரங்கொடுத்தால் தரணியிசை யரனே பிழைத்திடுவேன்
சாதனையும் பேதமற்ற போதனைசற் குருவுஞ்
சன்மார்க்க சங்கமது வாய்க்கிற் சுகம் வருமே
யேதமுற்ற யேழைப்பர தேசிக்கிந்நா ளிதங்கி
யெழிலருளென்முறைகேட் டிறைவா கபாலீச்சுரனே. (ங)

பொல்லாதக் காலமென்பேன் பொய்மெயெனப் புகல்வேன்
போக்குவர வற்ற தென்பேன் புகழுமிக ழென்பேன்